சுகாதார அமைச்சு | கல்வி அமைச்சு

Ontario

# பாடசாலைக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கும் செல்லும் மாணவர்கள் மற்றும் சிறுவர்களுக்கான COVID-19 முன்பரிசோதனையைச் செய்யும் முறை

பதிப்பு 3: ஒக்ரோபர் 5, 2020

**பாடசாலைக்கு அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்வதற்கு முன்பாக தினமும் மாணவர்கள் மற்றும் சிறுவர்களில் COVID-19 முன்பரிசோதனை செய்யப்படல் அவசியமாகும். மாணவர் ஒருவரின் சார்பில் பெற்றோர்/பாதுகாவலர்கள் இதனைப் பூர்த்திசெய்யலாம்.**

திகதி (mm-dd-yyyy)____________________

## முன்பரிசோதிப்புக் கேள்விகள் (பொருத்தமான நிரலில் ஒரு “X” ஐப் போடுங்கள்)

1. **பின்வரும் நோய்க்குறிகளில் ஏதாவது அவருக்குத் தற்போது இருக்கிறதா?**
புதிய, மோசமாகியிருக்கும், மற்றும் அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பில்லாத அனைத்தையும் தயவுசெய்து தெரிவுசெய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| **காய்ச்சல் மற்றும்/அல்லது குளிர்நடுக்கம்**<br>உடல்வெப்பநிலை 37.8 பாகை C /100 பாகை F அல்லது அதற்கும் அதிகம் | ☐ ஆம் | ☐ இல்லை |
| **இருமல் அல்லது குரைப்பதுபோன்ற சத்தமுள்ள இருமல் (croup)**<br>தொடர்ச்சியானது, வழமையைவிட அதிகமாக உள்ளது, சுவாசிக்கும்போது விசிலடிப்பதுபோன்ற சத்தத்தை உருவாக்குகிறது, அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (அஸ்மா, தொற்றுக்குப் பின்பான எதிர்வினையைக் காட்டும் காற்றுவழிகள் போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **மூச்சுத் திணறல்**<br>மூச்சு விடுவதில் சிரமம், ஆழமாகச் சுவாசிக்க முடியாதிருத்தல், அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (அஸ்மா போன்றவற்றுடன்)தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **சுவை அல்லது வாசனையை உணரும் தன்மை குறைவு அல்லது இழப்பு**<br>அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (பருவகால ஒவ்வாமைகள், நரம்பியல் ஒழுங்கீனங்கள் போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |

2. **பின்வரும் நோய்க்குறிகளில் ஏதாவது அவருக்குத் தற்போது இருக்கிறதா?**
புதிய, மோசமாகியிருக்கும், மற்றும் அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது மருத்துவ நிலைமைகளுடன் தொடர்பில்லாத அனைத்தையும் தெரிவுசெய்யுங்கள்.

| | | |
|---|---|---|
| **தொண்டை நோ அல்லது விழுங்குவதில் சிரமம்**<br>விழுங்குவதில் சிரமம், அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (பருவகால ஒவ்வாமை, நெஞ்செரிவு போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **தடிமன் அல்லது மூக்கடைப்பு**<br>அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (பருவகால ஒவ்வாமைகள், குளிருக்குள் வெளியில் நின்றமை போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **வழமைக்கு விரோதமான அல்லது நீண்ட நேரம் நிலைத்திருக்கும் தலையிடி**<br>அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (பதற்றம்-வகைத் தலைவலி, நாள்பட்ட ஒற்றைத் தலைவலி போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **குமட்டல், வாந்தி மற்றும்/அல்லது வயிற்றோட்டம்**<br>அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (irritable bowel syndrome -குடலுடன் தொடர்பான நோய்க் குறிகளின் தொகுதி, பிள்ளைகளில் பதற்றம், மாதவிடாய் காலத் தசைப்பிடிப்பு போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **வழமைக்கு விரோதமான அதீத களைப்பு அல்லது தசை வலிகள்**<br>சோர்வு, உற்சாகமின்மை, சிசுக்கள் பால்குடிப்பதில் ஆர்வமில்லாது இருத்தல், அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் (மனச்சோர்வு, தூக்கமின்மை, தைரொயிட் செயலிழப்பு, திடீரென ஏற்பட்ட காயம்/வலி போன்றவற்றுடன்) தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |

3. கடந்த 14 நாட்களில், கனடாவுக்கு வெளியே அவர் பயணம் செய்திருக்கிறாரா?
☐ ஆம் ☐ இல்லை

4. தற்போது COVID-19 இருக்கும் உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் என அவரை பொதுச் சுகாதரத்தினர் கடந்த 14 நாட்களுக்குள் அடையாளப்படுத்தியிருக்கின்றனரா?
☐ ஆம் ☐ இல்லை

5. அவர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் (வீட்டில் இருக்கவேண்டும்) என மருத்துவர், ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் அல்லது பொதுச் சுகாதார பிரிவினர் ஒருவர் அவருக்கு/உங்களுக்குச் சொல்லியிருக்கின்றனரா?
☐ ஆம் ☐ இல்லை

6. COVID க்கு வெளிப்படுத்தபட்டது தொடர்பான எச்சரிக்கை அறிவிப்பு கடந்த 14 நாட்களில், அவரின் கையடக்கத் தொலைபேசிக்கு (cell phone) வந்திருந்ததா?
☐ ஆம் ☐ இல்லை

## முன்பரிசோதிப்புக் கேள்விகளின் பெறுபேறுகள்

**!** கேள்வி 1 இன் கீழுள்ள ஏதாவது நோய்க்குறிகளுக்கு "ஆம்" என நீங்கள் பதிலளித்திருந்தால்:

- இந்தப் பெறுபேற்றினை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அந்த பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
- 14 நாட்களுக்கு அவரைத் தனிமைப்படுத்த வேண்டும் (வீட்டில் வைத்திருத்தல்) அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- COVID-19 பரிசோதனை ஒன்று அவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்கு, மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள்
- நோய்க்குறிகள் அற்ற வீட்டு அங்கத்தவர்கள் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு/ வேலைக்குச் செல்லக்கூடியதாக இருக்கலாம். உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதார பிரிவினரின் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது உள்ளூரில் இருக்கும் ஆபத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வேறுபட்ட விதிமுறைகள் இருக்கிறதா என்று அறிவதற்காக அழையுங்கள்

**!** கேள்வி 2 இன் கீழுள்ள ஒரே ஒரு நோய்க்குறிக்கு மட்டும் "ஆம்" என நீங்கள் பதிலளித்திருந்தால்:

- இந்தப் பெறுபேற்றினை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அந்த பாடசாலையை/சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
- 24 மணித்தியாலங்களுக்கு அவரைத் தனிமைப்படுத்த வேண்டும் (வீட்டில் வைத்திருத்தல்) அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- COVID-19 பரிசோதனை ஒன்று அவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்கு, மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள்.
- 24 மணி நேரத்தின் பின்னர், அவரின் நோய்க்குறி குறைந்திருந்தால், பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு செல்லக்கூடியளவுக்கு நலமாக இருக்கிறார் என அவர் உணரும்போது அவர் செல்லமுடியும். அவரைப் பரிசோதனை செய்யவேண்டிய தேவையில்லை.
- நோய்க்குறிகள் அற்ற வீட்டு அங்கத்தவர்கள் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு/ வேலைக்குச் செல்லக்கூடியதாக இருக்கலாம். உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதார பிரிவினரின் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது உள்ளூரில் இருக்கும் ஆபத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வேறுபட்ட விதிமுறைகள் இருக்கிறதா என்று அறிவதற்காக அழையுங்கள்

**!** கேள்வி 2 இன் கீழுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நோய்க்குறிகளுக்கு "ஆம்" என நீங்கள் பதிலளித்திருந்தால்:

- இந்தப் பெறுபேற்றினை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அந்த பாடசாலையை / சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
- 14 நாட்களுக்கு அவரைத் தனிமைப்படுத்த வேண்டும் (வீட்டில் வைத்திருத்தல்) அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- COVID-19 பரிசோதனை ஒன்று அவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்கு, மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள்
- நோய்க்குறிகள் அற்ற வீட்டு அங்கத்தவர்கள் பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு/ வேலைக்குச் செல்லக்கூடியதாக இருக்கலாம். உங்களின் உள்ளூர்ப் பொதுச் சுகாதார பிரிவினரின் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள் அல்லது உள்ளூரில் இருக்கும் ஆபத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வேறுபட்ட விதிமுறைகள் இருக்கிறதா என்று அறிவதற்காக அழையுங்கள்

**!** கேள்விகள் 3, 4, 5 அல்லது 6க்கு "ஆம்" என நீங்கள் பதிலளித்திருந்தால்:

- இந்தப் பெறுபேற்றினை அவர்களுக்குத் தெரிவிப்பதற்காக அந்த பாடசாலையை / சிறுவர் பராமரிப்பு நிலையத்தைத் தொடர்புகொள்ளுங்கள்
- 14 நாட்களுக்கு அவரைத் தனிமைப்படுத்த வேண்டும் (வீட்டில் வைத்திருத்தல்) அத்துடன் பரிசோதிக்கப்படல் அல்லது மருத்துவ அவசரகால நிலை தவிர்ந்த ஏனையவற்றுக்கு அவர் வெளியே செல்லக்கூடாது.
- COVID-19 பரிசோதனை ஒன்று அவருக்குத் தேவையா என்பது உள்ளடங்கலான அறிவுரை அல்லது மதிப்பீடு ஒன்றைப் பெறுவதற்கு, மருத்துவர்/ஆரோக்கியப் பராமரிப்பு வழங்குநர் ஒருவருடன் பேசுங்கள்

✔ அனைத்துக் கேள்விகளுக்கும் "இல்லை" என நீங்கள் பதிலளித்திருந்தால் உங்களின் பிள்ளை பாடசாலைக்கு/சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்குச் செல்லலாம்.

## ஒன்ராறியோ பொதுச் சுகாதாரம் - தொடர்புத் தடமறிதல்

**கீழ்வரும் கேள்விகளுக்குப் பதிலளிப்பது தெரிவுக்குரியது**. தொடர்புத் தடமறிதலுக்காக பொதுச் சுகாதார அதிகாரிகள் மட்டும் இந்தத் தகவல்களைப் பயன்படுத்துவார்கள். தகவல்கள் யாவும் 28 நாட்களின் பின்னர் அழிக்கப்படும்.

திகதி:______________________________

பெயர்:______________________________

தொலைபேசி அல்லது மின்னஞ்சல்:______________________________